செய்திக்குறிப்பு எண் :- 407 நாள் :- 15.11.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 15.11.2012

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கூடுவாஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. அப்துல்மஜித் என்பவரின் மகன் திரு. அன்சர்பாஷா 8.11.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் ஊரப்பாக்கம் கிராமம், சென்னை – திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. அன்சர்பாஷாவின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. அன்சர்பாஷாவின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9